1993 மார்ச் 30]

மாற்று இடத்தை தேர்வு செய்து கொடுத்தால், ஒரு மாத காலத்திற்குள் அந்தப் பணிகளைத் துவங்குவதற்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற, தமிழகத்தின் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 167, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

167—

சீர்காழி தொகுதியில் கூட்டுறவு பஞ்சாலை அமைத்தல்

*12754 திரு. து. மூர்த்தி : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் கூட்டுறவு பஞ்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் உரையில் இல்லை என்று சொல்லி விட்டாலும், இன்றைக்கு நாகை—காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள எனது சீர்காழி தொகுதி முழுவதும் விவசாயத்தையே நம்பி யிருக்கும் தொகுதியாகும். விவசாயத் தொழிலும், பஞ்சு உற்பத்தியும் மிக அதிக அளவில் சீர்காழி தொகுதியில் நடைபெறுகின்றன. சுமார் 1500 ஏக்கரில் பஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. அவைகள் அனைத்தும் சீர்காழிக்கு அடுத்து இருக்கிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படு கிறது. மேலும், 6 மாத காலம் விவசாயத் தொழிலை நம்பியிருக்கக்கூடிய விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மீதம் உள்ள 6 மாத காலத்திற்கு எந்தவித வேலைவாய்ப் பும் இல்லாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. எனவே, விவசாயத் தொழிலாளர்களின் நலனைக் காக்கிற நம்முடைய காவல் தெய்வம், இதய தெய்வம்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த நிதி ஆண்டில் இல்லாமல் இருந்தாலும் - அடுத்த நிதி யாண்டிலாவது தொடங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தஞ்சை மாவட்டத்தில் ஒரு நூற்பாலை மணல்மேட்டில் இருக்கிறது. அது தவிர தமிழகத்தில் 17 நூற்பாலைகள் இருக்கின்றன. அதன் வாயிலாக ஒத்தி செய்யப்படுகிற சிட்டா நூலும், கோன் நூலும், உபரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. கோ-ஆப்டெக்சுக்கு தருவது போக, மீதமுள்ளவற்றை தனியாருக்கு நாம் விற்றுக்கொண்டு இருக்கிறோம். இப்போது நாம் உபரி மாநிலமாக இருக்கிறோம். ஆதலால் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண் 169, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

169—

தமராக்கி - கொத்தங்குளம் சாலையில் ஆற்றுப் பாலம் கட்டும் பணி

*10886 திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, தமராக்கி - கொத்தங்குளம் சாலையில் மதுரை மாவட்டம் பகுதியை இணைக்கும் ஆற்றுப் பாலம் கட்டும் பணி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.